செ.வெ.எண்:68 / ஜுன் /2020 நாள்:23.06.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2019 ஆண்டுக்கு மத்திய அரசின் டென்சிங் நோர்கே தேசிய சாதனை விருதுகள் பெற தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

--------------

2019 ஆம் ஆண்டிற்கு **டென்சிங் நோர்கே தேசிய சாதனை** விருதுகள் பெறுவதற்கு மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த விருதுக்கு தகுதி மற்றும் திறமை உள்ளவர்கள் தங்களுடைய முழு விவரங்களுடன், தங்களுடைய சாதனைக்கான ஆவணங்களுடன் 29.06.2020 தேதிக்குள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகத்திற்கு 3 பிரதிகளுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பங்களை **www.sdat.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பட உள்ளது.

மேற்காணும் விருதிற்கான விண்ணப்பங்கள் மற்றும் முக்கிய விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி (தொலைபேசி எண்.0431-2420685) என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு.சிவராசு,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**